# NAIMISHARANYAM & AYODHYA TRIP

## 24th to 27th August 2022



# ITINERARY

**24-08-2022 – Dep. Chennai Airport (Terminal 1) 12:00 hrs,**
**Arr Lucknow Airport (Terminal 2) 14:25 hrs,**
**Stay at Hotel P.S. Grand, Charbagh, Lucknow**

**25-08-2022 – Visit to Naimisharanyam, Back to Lucknow**

**26-08-2022 – Visit to Ayodhya, Back to Lucknow**

**27-08-2022 – Local sightseeing in morning**
**Dep Lucknow Airport (Terminal 2) 18:00 hrs,**
**Arr Chennai Airport (Terminal 1) 20:35 hrs,**

Arrangements made by **Maa Bhawani Tours & Travels, Lucknow**
**Contact person - Saurabh Shukla**
**Phone - 9005920007, 6391999333**

***************

**பிள்ளைப் பெருமாள் ஐயங்காரின் நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதியில்**

அயோத்தி

ஆர்க்குமிது நன்றுதீ தானாலு நெஞ்சே!நீ
பார்க்கும் பலகலையும் பன்னாதே - சீர்க்கும்
திருவையோத் திப்பயலைச் சீரியமெய்ஞ் ஞானத்
துருவையோத் திற்பொருளை யோர்.

(எனது மனமே, நான் சொல்லுவது எல்லோருக்கும் நல்லதே . அப்படித் தீமையே ஆனாலும் நீ உலகத்தில் காணும் பல சாத்திரங்களையும் கண்டபடி கற்காமல் சிறந்த தத்துவ ஞான சொரூபியானவனும் வேதத்தின் பொருளாய் இருப்பவனும் ஆகிய சிறப்புள்ள கரு மேகம் போல் நிறத்தவனுமான ராம்னை தியானிப்பாயாக)

நைம்மிசாரண்ணியம்

**ஓரறிவு மில்லாத வென்போல்வார்க் குய்யலாம்**
**பேரறிவுண் டேனும் பிறர்க்கரிது - பாரறிய**
**நைம்மிசா ரண்ணியத்து நாதரடி யாரோடும்**
**இம்மிசார் வுண்டாயி னால்.**

(சிறிதேனும் அறிவில்லாத என் போன்றவர்கட்கும், மற்றையோர்க்கு, விசேஷஞானம் உளதாயினும், ஈடேறுதல் முடியாத காரியமாகும்.உலகத்தார் அறியும்படி, திருநைமிசாரணியத்தி லெழுந்தருளிய ஸர்வஸ்வாமியினது பக்தர்களோடும் கொஞ்சமாவது சம்பந்தம் ஏற்படுமேயாயின் ஈடேறுதல் கூடும்.)

அயோத்தி ஐந்து ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்டுள்ளது.

பெரியாழ்வார் - 6 பாசுரங்கள், குலசேகராழ்வார் - 4 பாசுரங்கள், தொண்டரடிப் பொடியாழ்வார் - 1 பாசுரம், திருமங்கை ஆழ்வார் - 1 பாசுரம், நம்மாழ்வார் - 1 பாசுரம்   மொத்தம் 13 பாசுரங்கள்

**பெரியாழ்வார் திருமொழி**

6. முடி ஒன்றி மூவுலகங்களும் ஆண்டு உன்
அடியேற்கு அருள் என்று அவன்பின் தொடர்ந்த
படியில் குணத்துப் பரத நம்பிக்கு அன்று
அடிநிலை ஈந்தானைப் பாடிப் பற
அயோத்தியர் கோமானைப் பாடிப் பற (311)

7. காளியன் பொய்கை கலங்கப் பாய்ந்திட்டு அவன்
நீள்முடி ஐந்திலும் நின்று நடம்செய்து
மீள அவனுக்கு அருள்செய்த வித்தகன்
தோள்-வலி வீரமே பாடிப் பற
தூ மணிவண்ணனைப் பாடிப் பற (312)

8. தார்க்கு இளந்தம்பிக்கு அரசு ஈந்து தண்டகம்
நூற்றவள் சொற்கொண்டு போகி நுடங்கு- இடைச்
சூர்ப்பணகாவைச் செவியொடு மூக்கு அவள்
ஆர்க்க அரிந்தானைப் பாடிப் பற
அயோத்திக்கு அரசனைப் பாடிப் பற (313)

10. காரார் கடலை அடைத்திட்டு இலங்கை புக்கு
ஓராதான் பொன்முடி ஒன்பதோடு ஒன்றையும்
நேரா அவன்தம்பிக்கே நீள் அரசு ஈந்த
ஆராவமுதனைப் பாடிப் பற
அயோத்தியர் வேந்தனைப் பாடிப் பற (315)

அனுமன் சீதைக்குக் கூறிய அடையாளம்
4. வார் அணிந்த முலை மடவாய் வைதேவீ விண்ணப்பம்
தேர் அணிந்த அயோத்தியர்கோன் பெருந்தேவீ கேட்டருளாய்
கூர் அணிந்த வேல் வலவன் குகனோடும் கங்கைதன்னிற்
சீர் அணிந்த தோழமை கொண்டதும் ஓர் அடையாளம் (320)

8. மைத் தகு மா மலர்க்குழலாய் வைதேவீ விண்ணப்பம்
ஒத்த புகழ் வானரக்கோன் உடன் இருந்து நினைத் தேட
அத்தகு சீர் அயோத்தியர்கோன் அடையாளம் இவை
மொழிந்தான்
இத் தகையால் அடையாளம் ஈது அவன் கைம் மோதிரமே (324)

9. வட திசை மதுரை சாளக்கிராம்ம்
வைகுந்தம் துவரை அயோத்தி
இடம் உடை வதரி இடவகை உடைய
எம் புருடோத்தமன் இருக்கை
தடவரை அதிரத் தரணி விண்டு இடியத்

தலைப்பற்றிக் கரை மரம் சாடிக்
கடலினைக் கலங்கக் கடுத்து இழி கங்கைக்
கண்டம் என்னும் கடிநகரே (398)

**குலசேகராழ்வார் - பெருமாள் திருமொழி**

6. சுற்றம் எல்லாம் பின் தொடரத் தொல் கானம் அடைந்தவனே
அற்றவர்கட்கு அருமருந்தே அயோத்தி நகர்க்கு அதிபதியே
கற்றவர்கள்தாம் வாழும் கணபுரத்து என் கருமணியே
சிற்றவைதன் சொற் கொண்ட சீராமா தாலேலோ (723)
7. ஆலின் இலைப் பாலகனாய் அன்று உலகம் உண்டவனே
வாலியைக் கொன்று அரசு இளைய வானரத்துக்கு
அளித்தவனே
காலின் மணி கரை அலைக்கும் கணபுரத்து என் கருமணியே
ஆலி நகர்க்கு அதிபதியே அயோத்திமனே தாலேலோ (724)

**குலசேகராழ்வார் பெருமாள் திருமொழி**

1.740 அங்கண் நெடு மதில் புடை சூழ் அயோத்தி என்னும்
அணி நகரத்து உலகு அனைத்தும் விளக்கும் சோதி
வெங் கதிரோன் குலத்துக்கு ஓர் விளக்காய்த் தோன்றி
விண் முழுதும் உயக் கொண்ட வீரன்தன்னைச்
செங்கண் நெடுங் கரு முகிலை இராம்ன்தன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள்
எங்கள் தனி முதல்வனை எம்பெருமான்தன்னை
என்று கொலோ கண் குளிரக் காணும் நாளே (740)

8. அம் பொன் நெடு மணிமாட அயோத்தி எய்தி
அரசு எய்தி அகத்தியன்வாய்த் தான் முன் கொன்றான்
தன் பெருந்தொல் கதை கேட்டு மிதிலைச் செல்வி
உலகு உய்யத் திரு வயிறு வாய்த்த மக்கள்
செம் பவளத் திரள்வாய்த் தன் சரிதை கேட்டான்
தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள்
எம்பெருமான் தன்சரிதை செவியால் கண்ணால்
பருகுவோம் இன்னமுதம் மதியோம் ஒன்றே (747)

**தொண்டர் அடிப்பொடி ஆழ்வார் திருப்பள்ளி எழுச்சி**

4. மேட்டு இள மேதிகள் தளை விடும் ஆயர்கள்
வேய்ங்குழல் ஓசையும் விடை மணிக் குரலும்
ஈட்டிய இசை திசை பரந்தன வயலுள்
இரிந்தன சுரும்பினம் இலங்கையர் குலத்தை
வாட்டிய வரிசிலை வானவர் ஏறே
மா முனி வேள்வியைக் காத்து அவபிரதம்
ஆட்டிய அடு திறல் அயோத்தி எம் அரசே
அரங்கத்தம்மா பள்ளி எழுந்தருளாயே. (919)

**திருமங்கை ஆழ்வார் பெரிய திருமொழி**

8. கவள யானை பாய் புரவி தேரொடு அரக்கர் எல்லாம்
துவள வென்ற வென்றியாளன்-தன் தமர் கொல்லாமே
தவள மாடம் நீடு அயோத்தி காவலன்-தன் சிறுவன்

குவளை வண்ணன் காண ஆடீர்-குழமணிதூரமே (1874)

**நம்மாழ்வார் திருவாய் மொழி**

1. கற்பார் இராம் பிரானை அல்லால் மற்றும் கற்பரோ
புல் பா முதலா புல் எறும்பு ஆதி ஒன்று இன்றியே
நல் பால் அயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும்
நல் பாலுக்கு உய்த்தனன் நான்முகனார் பெற்ற நாட்டுளே?
(3488)

திருநைமிசாரணியம் திருமங்கை ஆழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்டுள்ளது. மொத்தம் 10 பாசுரங்கள்

**பெரிய திருமொழி**

997 வாள் நிலா முறுவல் சிறு நுதல் பெருந் தோள்
    மாதரார் வன முலைப் பயனே
பேணினேன் அதனைப் பிழை எனக் கருதி
    பேதையேன் பிறவி நோய் அறுப்பான்
ஏண் இலேன் இருந்தேன் எண்ணினேன் எண்ணி
    இளையவர் கலவியின் திறத்தை
நாணினேன் வந்து உன் திருவடி அடைந்தேன்-
    நைமிசாரணியத்துள் எந்தாய் (1)

998 சிலம்பு அடி உருவின் கரு நெடுங் கண்ணார்-
    திறத்தனாய் அறத்தையே மறந்து
புலன் படிந்து உண்ணும் போகமே பெருக்கி
    போக்கினேன் பொழுதினை வாளா
அலம் புரி தடக்கை ஆயனே மாயா
    வானவர்க்கு அரசனே வானோர்
நலம் புரிந்து இறைஞ்சும் திருவடி அடைந்தேன்-
    நைமிசாரணியத்துள் எந்தாய் (2)

999 சூதினைப் பெருக்கி களவினைத் துணிந்து
    சுரி குழல் மடந்தையர்திறத்துக்
காதலே மிகுத்து கண்டவா திரிந்த

தொண்டனேன் நமன்-தமர் செய்யும்
வேதனைக்கு ஒடுங்கி நடுங்கினேன் வேலை
வெண் திரை அலமரக் கடைந்த
நாதனே வந்து உன் திருவடி அடைந்தேன்-
நைமிசாரணியத்துள் எந்தாய் (3)

1000 வம்பு உலாம் கூந்தல் மனைவியைத் துறந்து
பிறர் பொருள் தாரம் என்று இவற்றை
நம்பினார் இறந்தால் நமன்-தமர் பற்றி
எற்றி வைத்து எரி எழுகின்ற
செம்பினால் இயன்ற பாவையை பாவீ
தழுவு என மொழிவதற்கு அஞ்சி
நம்பனே வந்து உன் திருவடி அடைந்தேன்-
நைமிசாரணியத்துள் எந்தாய் (4)

1001 இடும்பையால் அடர்ப்புண்டு இடுமினோ துற்று என்று
இரந்தவர்க்கு இல்லையே என்று
நெடுஞ் சொலால் மறுத்த நீசனேன் அந்தோ
நினைக்கிலேன் வினைப் பயன் தன்னை
கடுஞ் சொலார் கடியார் காலனார் தமரால்
படுவது ஓர் கொடு மிறைக்கு அஞ்சி
நடுங்கி நான் வந்து உன் திருவடி அடைந்தேன்-
நைமிசாரணியத்துள் எந்தாய் (5)

1002 கொடிய மனத்தால் சினத் தொழில் புரிந்து
திரிந்து நாய் இனத்தொடும் திளைத்திட்டு
ஓடியும் உழன்றும் உயிர்களே கொன்றேன்
உணர்விலேன் ஆதலால் நமனார்
பாடியைப் பெரிதும் பரிசு அழித்திட்டேன்
பரமனே பாற்கடல் கிடந்தாய்
நாடி நான் வந்து உன் திருவடி அடைந்தேன்
-நைமிசாரணியத்துள் எந்தாய் (6)

1003 நெஞ்சினால் நினைந்தும் வாயினால் மொழிந்தும்
நீதி அல்லாதன செய்தும்
துஞ்சினார் செல்லும் தொல் நெறி கேட்டே
துளங்கினேன் விளங்கனி முனிந்தாய்
வஞ்சனேன் அடியேன் நெஞ்சினில் பிரியா
வானவா தானவர்க்கு என்றும்
நஞ்சனே வந்து உன் திருவடி அடைந்தேன்-
நைமிசாரணியத்துள் எந்தாய் (7)

1004 ஏவினார் கலியார் நலிக என்று என்மேல்-
எங்ஙனே வாழும் ஆறு?-ஐவர்
கோவினார் செய்யும் கொடுமையை மடித்தேன்
குறுங்குடி நெடுங் கடல் வண்ணா
பாவின் ஆர் இன் சொல் பல் மலர் கொண்டு உன்
பாதமே பரவி நான் பணிந்து என்

நாவினால் வந்து உன் திருவடி அடைந்தேன்
-நைமிசாரணியத்துள் எந்தாய் (8)

1005 ஊன் இடைச் சுவர் வைத்து என்பு தூண் நாட்டி
உரோமம் வேய்ந்து ஒன்பது வாசல்-
தான் உடைக் குரம்பை பிரியும்போது உன்-தன்
சரணமே சரணம் என்று இருந்தேன்
தேன் உடைக் கமலத் திருவினுக்கு அரசே
திரை கொள் மா நெடுங் கடல் கிடந்தாய்
நான் உடைத் தவத்தால் திருவடி அடைந்தேன்-
நைமிசாரணியத்துள் எந்தாய் (9)

1006 ஏதம் வந்து அணுகாவண்ணம் நாம் எண்ணி
எழுமினோ தொழுதும் என்று இமையோர்-
நாதன் வந்து இறைஞ்சும் நைமிசாரணியத்து
எந்தையைச் சிந்தையுள் வைத்து
காதலே மிகுத்த கலியன் வாய் ஒலிசெய்
மாலை-தான் கற்று வல்லார்கள்
ஓத நீர் வையம் ஆண்டு வெண் குடைக் கீழ்
உம்பரும் ஆகுவர் தாமே (10)

**ஶ்ரீ நாம ராமாயணம்**

**பால காண்டம்**

1. சுத்த ப்ரஹ்ம பராத்பர ராம்

2. காலாத்மக பரமேச்வர ராம்

சுத்த ப்ரஹ்ம பராத்பர ராம், காலாத்மக பரமேச்வர ராம்

3. சேஷதல்ப ஸுகநித்ரித ராம்

4. ப்ரஹ்மா த்யமர ப்ரார்த்த தித ராம்

5. சண்டகிரணகுல மண்டந ராம்

6. ஶ்ரீ மத் தசரத நந்தன ராம்

7. கௌசல்யா ஸுகவர்த்த்ந ராம்

8. விச்வாமித்ர ப்ரியதன ராம்

9. கோர தாடகா காதக ராம்

10. மாரீ சாதி நிபாதக ராம்

11. கௌசிக மக ஸம்ரக்ஷக ராம்

12. ஶ்ரீ மத ஹல்யோத்தாரக ராம்

13. கௌதம முனி ஸம்பூஜித ராம்

14. ஸுரமுனி வரகண ஸம்ஸ்துத ராம்

15. நாவிகதாவித ம்ருதுபத ராம்

16. மிதிலாபுரஜன மோஹக ராம்

17. விதேஹ மானஸ ரஞ்ஜக ராம்

18. த்ரியம்பக கார்முக பஞ்ஜக ராம்

19. ஸீதார்ப்பித வரமாலிக ராம்

20. க்ருத வைவாஹிக கௌதுக ராம்

21. பார்க்கவ தர்ப்ப விநாசக ராம்

22. ஸ்ரீ மதயோத்யா பாலக ராம்

ராம ராம ஜய ராஜா ராம், ராம ராம ஜய ஸீதா ராம்.

ராம ராம ஜய ராஜா ராம், ராம ராம ஜய ஸீதா ராம்.

**அயோத்யா காண்டம்**

23. அகணித குணகண பூஷித ராம்

24. அவநீத நயா காமித ராம்

அகணித குணகண பூஷித ராம், அவநீத நயா காமித ராம்

25. ராகாசந்த்ர ஸமாநந ராம்

26. பித்ரு வாக்கியாச்ரித காநந ராம்

27. ப்ரியகுஹ விநிவேதித பத ராம்

28. தத்ஷாவித நிஜ ம்ருதுபத ராம்

29. பரத்வாஜமுகா நந்தக ராம்

30. சித்ரகூடாத்ரி நிகேத ந ராம்

31. தசரத ஸந்தத சிந்தித ராம்

32. கைகேயி தநயார்த்தித ராம்

33. விரசித நிஜ பித்ருகர்மக ராம்

34. பரதார்ப்பித நிஜ பாதுசு ராம்

ராம ராம ஜய ராஜா ராம், ராம ராம ஜய ஸீதா ராம்.

ராம ராம ஜய ராஜா ராம், ராம ராம ஜய ஸீதா ராம்.

**ஆரண்ய காண்டம்**

35. தண்டகாவந ஜந பாவன ராம்

36. துஷ்ட விராத விநாசன ராம்

தண்டகாவந ஜந பாவன ராம், துஷ்ட விராத விநாசன ராம்

37. சரபங்க ஸுதீஷ்ண அர்ச்சித ராம்

38. அகஸ்த்யா நுக்ரஹ வர்த்தித ராம்

39. க்ருத்ராதிப ஸம்ஸேவித ராம்

40. பஞ்சவடி தடஸுஸ்த்தித ராம்

41. சூர்ப்பணகார்த்தி விதாயக ராம்

42. கரதூக்ஷணமுக ஸூதக ராம்

43. ஸீதா ப்ரிய ஹரிணாநுக ராம்

44. மாரி சார்த்தி க்ருதாசுக ராம்

45. விநஷ்ட ஸீதாந்வேஷக ராம்

46. க்ருத்ராதிப கதி தாயக ரா

47. சபரீ தத்த பலாசந ராம்

48. கபந்த பாஹுச் சேதந ராம்

ராம ராம ஜய ராஜா ராம், ராம ராம ஜய ஸீதா ராம்.

ராம ராம ஜய ராஜா ராம், ராம ராம ஜய ஸீதா ராம்.

**கிஷ்கிந்தா காண்டம்**

49. ஹநுமத் ஸேவித நிஜபத ராம்

50. நத ஸுக்ரீ வாபீஷ்டத ராம்

ஹநுமத் ஸேவித நிஜபத ராம், நத ஸுக்ரீ வாபீஷ்டத ராம்

51. கர்வித வாலி ஸம்ஹாரக ராம்

52. வாநர தூத ப்ரேஷக ராம்

53. ஹிதகர லக்ஷ்மண ஸம்யுத ராம்

ராம ராம ஜய ராஜா ராம், ராம ராம ஜய ஸீதா ராம்.

ராம ராம ஜய ராஜா ராம், ராம ராம ஜய ஸீதா ராம்

**ஸுந்தர காண்டம்**

54. கபிவர ஸ்ந்தத ஸம்ஸ்ம்ருத ராம்

55. தத்கதி விக்ந த்வம்ஸக ராம்

கபிவர ஸ்ந்தத ஸம்ஸ்ம்ருத ராம், தத்கதி விக்ந த்வம்ஸக ராம்

56. ஸீதா ப்ராணா தாரக ராம்

57. துஷ்ட தசா நந தூஷித ராம்

58. சிஷ்ட ஹநூமத் பூஷித ராம்

59. ஸீதா வேதித காகாவந ராம்

60. க்ருத சூடாமணி தர்சந ராம்

61. கபிவர வசனா ச்வாஸித ராம்

ராம ராம ஜய ராஜா ராம், ராம ராம ஜய ஸீதா ராம்.

ராம ராம ஜய ராஜா ராம், ராம ராம ஜய ஸீதா ராம்

**யுத்த காண்டம்**

62. ராவண நிதந ப்ரஸ்தித ராம்

63. வா நர ஸைந்ய ஸமாவ்ருத ராம்

ராவண நிதந ப்ரஸ்தித ராம், வா நர ஸைந்ய ஸமாவ்ருத ராம்

64. சோஷித ஸரி தீசார்த்தித ராம்

65. விபீஷணாபய தாயக ராம்

66. பர்வத ஸேது நிபந்தக ராம்

67. கும்பகர்ண சிரச்சேத ராம்

68. ராக்ஷஸ ஸங்க விமர்த்தக ராம்

69. அஹிமஹி ராவண சாரண ராம்

70. ஸம்ஹ்ருத தசமுக ராவண ராம்

71. விதிபவ முகஸுர ஸம்ஸ்துத ராம்

72. கஸ்தித தசரத வீக்ஷித ராம்

73. ஸீதா தர்சன மோதித ராம்

74. அபிஷிக்த விபீஸிணநத ராம்

75. புஷ்பக யாநா ரோஹண ராம்

76. பரத்வாஜாபிநிஷேவண ராம்

77. பரதப்ராண ப்ரியகர ராம்

78. ஸாகேதபுரீ பூஷண ராம்

79. ஸகல ஸ்வீய ஸமாநத ராம்

80. ரத்ந லஸத் பீடாஸ்தித ராம்

81. பட்டாபிஷேக லங்க்ருத ராம்

82. பார்த்திவ குல ஸம்மாநித ராம்

83. விபிஷணார்ப்பித ரங்கக ராம்

84. கீசகுலா நுகர்ஹகர ராம்

85. ஸகலஜீவ ஸம்ரக்ஷக ராம்

86. ஸமஸ்த லோகா தாரக ராம்

ஸகலஜீவ ஸம்ரக்ஷக ராம், ஸமஸ்த லோகா தாரக ராம்

ராம ராம ஜய ராஜா ராம், ராம ராம ஜய ஸீதா ராம்.

ராம ராம ஜய ராஜா ராம், ராம ராம ஜய ஸீதா ராம்

**உத்தர காண்டம்**

87. ஆகத முநிகண ஸம்ஸ்துத ராம்

88. விச்ருத தசகண்டோத்பவ ராம்

ஆகத முநிகண ஸம்ஸ்துத ராம், விச்ருத தசகண்டோத்பவ ராம்

89. ஸீதாலிங்கன நிர்வ்ருத ராம்

90. நீதிஸுரக்ஷித ஜநபத ராம்

91. விபிந த்யாஜித ஜநகஜ ராம்

92. காரித லவணாஸுரவத ராம்

93. ஸ்வர்க்கத சம்புக ஸம்ஸ்துத ராம்

94. ஸ்வதநய குசலவ நந்தித ராம்

95. அச்வமேத க்ரது தீக்ஷித ராம்

96. காலாவேதித ஸுரபத ராம்

97. ஆயோத்யகஜந முக்தித ராம்

98. விதமுக விபுதா நந்தக ராம்

99. தேஜோமய நிஜரூபக ராம்

100. ஸம்ஸ்ருதி பந்த விமோசக ராம்

101. தர்ம ஸ்தாபந தத்பர ராம்

102. பக்தி பாராயண முக்தித ராம்

103. ஸர்வ சராசர பாலக ராம்

104. ஸர்வ பவாமயவாரக ராம்

105. வைகுண்டாலய ஸம்ஸ்த்தித ராம்

106. நித்யாநந்த பதஸ்தித ராம்

. வைகுண்டாலய ஸம்ஸ்த்தித ராம், நித்யாநந்த பதஸ்தித ராம்

107. ராம ராம ஜய ராஜா ராம்

108. ராம ராம ஜய ஸீதா ராம்.

பயஹர மங்கள தசரத ராம்

ஜய ஜய மங்கள சீதாராம்

மங்கள கர ஜய மங்கள ராம்

ஸங்கத சுப விபோயதய ராம்

ஆனந்தாம்ருத வர்ஷக ராம்

ஆச்ரித வத்ஸல ஜய ஜய ராம்

ரகுபதி ராகவ ராஜாராம்

பதித பாவன ஸீதாராம்

ராம ராம ஜய ராஜா ராம், ராம ராம ஜய ஸீதா ராம்.

ராம ராம ஜய ராஜா ராம், ராம ராம ஜய ஸீதா ராம்

*******

**ஸ்ரீ ராம த்யான ஸ்தோத்ரம்**

ஆபதாம் அபஹர்த்தாரம் தாதாரம் ஸர்வ ஸம்பதாம்|
லோகாபிராம்ம் ஸ்ரீராம்ம் பூயோ பூயோ நமாம்யஹம் ||
ஆர்த்தாநாம் ஆர்த்தி ஹந்தாரம் பீதனாம்பீதி நாச'னம் |
த்விஷதாம் காலதண்டம் தம் ராம்சந்த்ரம் நமாம்யஹம் ||

நம: கோதண்ட ஹஸ்தாய ஸந்தீக்ருத ச'ராய ச |
கண்டிதாகில தைத்யாய ராமாயா 'பந்நிவாரிணே ||

ராமாய ராம்பத்ராய ராம்சந்த்ராய வேதஸே |
ரகுநாதாய நாதாய ஸீதாயா: பதயே நம: ||

அக்ரதஃ ப்ருஷ்டதச்' சைவ பார்ச்'வதச்'ச மஹாபலௌ |
ஆகர்ணபூர்ண தன்வாநௌ ரக்ஷேதாம் ராம்லக்ஷ்மணௌ ||

ஸன்னத்த: கவச: கட்கீ சாப பாணதரோ யுவா |
கச்சன் மமாக்ரதோ நித்யம் ராம்: பாதுஸலக்ஷ்மண: ||

அச்யுதாநந்த கோவிந்த நாமோச்சாரண பேஷஜாத் |
நச்'யந்தி ஸகலாரோகா: ஸத்யம் ஸத்யம் வதாம்யஹம் ||

ஸத்யம் ஸத்யம் புனஸ் ஸத்யம் உத்ருத்ய புஜமுச்யதே |
வேதாச்’சா’ஸ்த்ராத் பரம்நாஸ்தி நதைவம் கேச’வாத்பரம் ||

ச’ரீரே ஜர்ஜரிபூதே வ்யாதிக்ரஸ்தே களேபரே |
ஔஷதம் ஜாந்ஹவீ தோயம் வைத்யோ நாராயணோ ஹரி: ||

ஆலோட்ய ஸர்வசா’ஸ்த்ராணி விசார்ய ச புன: புன: |
இதமேகம் ஸுநிஷ்பந்நம் த்யேயோ நாராயணோ ஹரி: ||

காயேந வாசா மநஸா இந்த்ரியைர்வா புத்யாத்மநா வா
ப்ரக்ருதே: ஸ்வபாவாத் |
கரோமி யத்யத் ஸகலம் பரஸ்மை நாராயணாயேதி
ஸமர்ப்பயாமி ||

யதக்ஷர பதப்ரஷ்டம் மாத்ராஹீனம்து யத்பவேத் |
தத்ஸர்வம் க்ஷம்யதாம் தேவ நாராயண நமோஸ்துதே ||

விஸர்க்க பிந்து மாத்ராணி பதபாதாக்ஷராணி ச |
ந்யூநாநி ச அதிரிக்தாநி க்ஷமஸ்வ புருஷோத்தம ||

**********

**ஸ்ரீ விஷ்ணு சஹஸ்ரநாமத்திலிருந்து**

ஸ்ரீ ராம ராம ராமேதி ரமே ராமே மனோ ரமே
சஹஸ்ர நாம தத்துல்யம் ராம நாம வரானனே

ஸ்ரீ ராம ராம ராமேதி ரமே ராமே மனோ ரமே

சஹஸ்ர நாம தத்துல்யம் ராம நாம வரானனே

ஸ்ரீ ராம ராம ராமேதி ரமே ராமே மனோ ரமே

சஹஸ்ர நாம தத்துல்யம் ராம நாம வரானனே

ஸ்ரீ ராம நாம வரானன ஓம் நம இதி

**********

**ஸ்ரீ ராமர் துதி**

நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே தின்மையும் பாவமும்

சிதைந்து தேயுமே சென்மமும் மரணமும் இன்றித் தீருமே

இம்மையே இராம் என்றிரண்டே ழுத்தினால்.

நாடிய பொருள்கை கூடும் ஞானமும் புகழும் உண்டாம் வீடியல்

வழிய தாக்கும் வேரியம் கமலை நோக்கும் நீடிய அரக்கர் சேனை

நீறுபட் டழிய வாகை சூடிய சிலையி ராம்ன் தோள்வலி கூறு

வோர்க்கே.

மும்மைசால் உலகுக் கெல்லாம் மூலமந்திரத்தை முற்றும்

தம்மையே தமர்க்கு நல்கும் தனிப்பெரும் பதத்தைத் தாமே

இம்மையே எழுமை நோய்க்கும் மருந்துமாம் இராம்ன் என்னும்

செம்மைசேர் நாமம் தன்னைக் கண்களில் தெரியக் கண்டார்.

********

**ஸ்ரீராம நாம மஹிமை**

ராம நாமம் ஒருமருந்து

ராம நாமம் அரு மருந்து

ஒரே ஒரு மருந்து ஒரு மருந்து
உலகத்தை உய்விக்க வந்த மருந்து
ராம ராம ராம ராம ராம ராம ராம்
ராம ராம ராம சீதா ராம ராம ராம்

சொல்லின் செல்வன் ஆஞ்சநேயன் தின்னும் மருந்து
சொல்லச் சொல்ல தித்திக்கும் அந்த மருந்து
அஞ்சனா பாக்கியம் என்னும் மருந்து
ஆர்வத்துடன் அசை போட்டு தின்னும் மருந்து
ராம ராம ராம ராம ராம ராம ராம்
ராம ராம ராம சீதா ராம ராம ராம்

தாரக மந்த்ரம் அந்த மருந்து
தாபம் மூன்றும் போக்கடிக்கும் அந்த மருந்து
தின்னத் தின்னத் திகட்டாது அந்த மருந்து
தேவர்களுக்கும் கிட்டாது அந்த மருந்து
ராம ராம ராம ராம ராம ராம ராம்
ராம ராம ராம சீதா ராம ராம ராம்

ஜானகிக்கு ஜீவன் தந்தது அந்த மருந்து
ஜாதி மத பேதமின்றி சொல்லும் மருந்து
மாருதிக்கு பெருமை தந்தது அந்த மருந்து
மாதேவன் பாராட்டிப் பேசும் மருந்து
ராம ராம ராம ராம ராம ராம ராம்
ராம ராம ராம சீதா ராம ராம ராம்

மங்காத செல்வம் தரும் அந்த மருந்து
மாயப் பிறப்பறுக்கும் அந்த மருந்து
பாமரர்க்கும் பண்டிதர்க்கும் ஒரே மருந்து
பாரபட்சமின்றி பலன் தரும் அந்த மருந்து
ராம ராம ராம ராம ராம ராம ராம்
ராம ராம ராம சீதா ராம ராம ராம்

துறவிகளும் யோகிகளும் தின்னும் மருந்து
துளசிதாசன் தேடித் தேடிக் கண்ட மருந்து
ஐந்தும் எட்டும் கூட்டிச் சேர்த்தது அந்த மருந்து
ஐந்து வித பாவங்களை போக்கும் அந்த மருந்து
ராம ராம ராம ராம ராம ராம ராம்
ராம ராம ராம சீதா ராம ராம ராம்

வைதேஹிக்கு வாழ்வளித்தது அந்த மருந்து
வையகத்தை வாழவைக்க வந்த மருந்து
இல்லறத்தில் வாழ்வு தரும் அந்த மருந்து
இறுதியிலே வீடு தரும் அந்த மருந்து
ராம ராம ராம ராம ராம ராம ராம்
ராம ராம ராம சீதா ராம ராம ராம்

பலவித நன்மைகளைத் தந்த மருந்து
பக்தர்களை பாடி ஆட வைத்த மருந்து
பலவித பயங்களைப் போக்கும் மருந்து

கேட்கக் கேட்கத் தெவிட்டாத ராம நாம மருந்து

ராம ராம ராம ராம ராம ராம ராம்

ராம ராம ராம சீதா ராம ராம ராம்

********

**திவ்ய பிரபந்த பாசுர ராமாயணம்.** - நாலாயிர திவ்யப் பிரபந்தத்திலிருந்து சொற்றொடர்களைத் தொகுத்து பெரியவாச்சான் பிள்ளை இயற்றியது.

**பால காண்டம்**

திரு மடந்தை, மண் மடந்தை இரு பாலும் திகழ,

நலம் அந்தம் இல்லது ஓர் நாட்டில்,

அந்தமில் பேரின்பத்து அடியரொடு,

ஏழ் உலகும் தனிக்கோல் செல்ல வீற்றிருக்கும்,

அயர்வரும் அமரர்கள் அதிபதியான,

அணியார் பொழில் சூழ் அரங்க நகர் அப்பன்,

அலை நீர்க் கடலுள் அழுந்தும் நாவாய் போல்,

ஆவார் ஆர் துணை என்று துளங்கும்,

நல் அமரர் துயர் தீர,

வல்லரக்கர் வாழ் இலங்கை பாழ் படுக்க எண்ணி,

மண் உலகத்தோர் உய்ய,

அயோத்தி எனும் அணி நகரத்து,

வெங்கதிரோன் குலத்துக்கு ஓர் விளக்காய்,

கௌசலை தன் குல மதலையாய்,

தயரதன் தன் மகனாய்த் தோன்றி,

குணம் திகழ் கொண்டலாய்,

மந்திரம் கொள் மறை முனிவன் வேள்வி காக்க நடந்து வந்து,

தனை எதிர்த்த தாடகை தன் உரம் கீண்டு,

வல்லரக்கர் உயிர் உண்டு

கல்லைப் பெண்ணாக்கி,

காரார் திண் சிலை இருத்து,

மைதிலியை மணம் புணர்ந்து,

இருபத்து ஒரு கால் அரசு களை கட்ட,

மழுவாளி வெவ்வரி நல் சிலை வாங்கி வென்றி கொண்டு,

அவன் தவத்தை முற்றும் செற்று,

அம்பொன் நெடு மணி மாட அயோத்தி எய்தி,

அரியணை மேல் மன்னன் ஆவான் நிற்க,

**அயோத்யா காண்டம்**

கொங்கைவன் கூனி சொல் கொண்ட

கொடிய கைகேயி வரம் வேண்ட,

அக்கடிய சொல் கேட்டு

மலக்கிய மாமனத்தனனாய் மன்னவனும் மறாதொழிய

'குலக்குமரா காடுறையப்போ' என்று விடை கொடுப்ப,

இந்நிலத்தை வேண்டாது

ஈன்றெடுத்த தாயரையும் இராச்சியமும் ஆங்கொழிந்து,

மைவாய களிறொழிந்து மா ஒழிந்து தேரொழிந்து,

கலன் அணியாதே காமர் எழில் விழல் உடுத்து

அங்கங்கள் அழகு மாறி

மானமரும் மென் நோக்கி வைதேவியின் துணையா

இளங்கோவும் வாளும் வில்லும் கொண்டு பின் செல்ல,

கலையும் கரியும் பரிமாவும் திரியும் கானம் கடந்து போய்,
பக்தி உடைக் குகன்கடத்த கங்கை தன்னைக் கடந்து
வனம் போய்ப் புக்கு காயோடு நீடு கனி உண்டு
வியன் கான மரத்தின் நீழல்
கல் அணைமேல் கண் துயின்று
சித்திர கூடத்து இருப்ப, தயரதன் தான்
'நின் மகன் மேல் பழி விளைத்திட்டு என் பெற்றாய் கைகேசி?
நானும் வானகமே மிக விரும்பிப் போகின்றேன்'
என்று வான் ஏற,
தேனமரும் பொழில் சாரல் சித்திர கூடத்து
ஆனை புரவி தேரோடு காலாள்
அணி கொண்ட சேனை சுமந்திரன்
வசிட்டருடன் பரத நம்பி பணிய
தம்பிக்கு மரவடியை வான்பணயம் வைத்துக் குவலயத்
துங்கக் கரியும் பரியும் இராச்சியமும்
எங்கும் பரதற்கு அருளி விடை கொடுத்து
திருவுடைய திசைக்கருமம் திருத்தப்போய் தண்டகாரண்யம்
புகுந்து

**ஆரண்ய காண்டம்**

மறை முனிவருக்கு 'அஞ்சேல்மின்!' என்று விடை கொடுத்து
வெங்கண் விறல் விராதன் உக வில் குனித்து
வண்டமிழ் மாமுனி கொடுத்த வரிவில் வாங்கி
புலர்த்தெழுந்த காமத்தால் சீதைக்கு நேர் ஆவன் என்ன,
பொன்னிறம் கொண்ட சுடு சினத்த சூர்ப்பணகாவைக்

கொடி மூக்கும் காதிரண்டும்

கூரார்ந்த வாளால் ஈரா விடுத்து,

கரனோடு தூடணன் தன் உயிரை வாங்க,

அவள் கதறித் தலையில் அங்கை வைத்து

மலை இலங்கை ஓடிப்புக,

கொடுமையின் கடுவிசை அரக்கன்

அலைமலி வேற்கண்ணாளை அகல்விப்பான்

ஓருருவாய மானை அமைத்து சிற்றெயிற்று

முற்றல் மூங்கில் மூன்று தண்டத்தனாய் வஞ்சித்து

இலைக்குரம்பில் தனி இருப்பில்

கனிவாய்த் திருவினைப் பிரித்து

நீள்கடல் சூழ் இலங்கையில்

அரக்கர் குடிக்கு நஞ்சாகக் கொடுபோய்

வம்பு உலாம் கடிகாவில் சிறையாய் வைக்க

அயோத்தியர் கோன் மாயமான் மாயச் செற்று

அலைமலி வேற் கண்ணாளை அகன்று தளர்வெய்தி

சடாயுவை வைகுந்தத்தேற்றிக்

கங்குலும் பகலும் கண்துயில் இன்றி

கானகம் படி உலாவி உலாவி

கணை ஒன்றினால் கவந்தனை மடித்து

சபரி தந்த கனி உவந்து

**கிஷ்கிந்தா காண்டம்**

வனமருவு கவியரசன் தன்னோடு காதல் கொண்டு

மராம்ரம் ஏழ் எய்தி

உருத்து எழு வாலி மார்பில்
ஒரு கணை உருவ ஓட்டிக்
கருத்துடைத் தம்பிக்கு
இன்பக் கதிர் முடி அரசளித்து
வானரக்கோனுடனிருந்து வைதேகி தனைத் தேட
விடுத்த திசைகருமம் திருத்து,
திறல் விளங்கு மாருதியும்
மாயோன் தூதுரைத்தல் செப்ப!

**சுந்தரகாண்டம்**

சீராரும் திறலனுமன் மாகடலைக் கடந்தேறி
மும்மதில் நீள் இலங்கை புக்குக் கடிகாவில்
வாராருமுலை மடவாள் வைதேவி தனைக்கண்டு
'நின்னடியேன் விண்ணப்பம் கேட்டருளாய்!
அயோத்திதனில் ஓர் இடவகையில்
எல்லியம் போதினிதிருத்தல்
மல்லிகைமாமலை கொண்டாங்கார்த்ததும்
கலக்கிய மாமனத்தினளாய்க் கைகேயி வரம் வேண்ட
மலக்கிய மாமனத்தவனாய் மன்னவனும் மறாதொழிய
குலக்குமரா காடுறையப்போ என்று விடைகொடுப்ப
இலக்குமணன் தன்னோடங்கேகியதும்
கங்கை தன்னில்
கூரணிந்த வேல்வலவன் குகனோடு
சீரணிந்த தோழமை கொண்டதுவும்,
சித்திரகூடத்திருப்பப் பரத நம்பி பணிந்ததுவும்,

சிறுகாக்கை முலைதீண்ட மூவுலகும் திரிந்தோடி

வித்தகனே ராமா ஓ நின்னபயம்

என்ன அத்திரமே அவன் கண்ணை அறுத்ததுவும்

பொன்னொத்த மானொன்று புகுந்தினிது விளையாட

நின்னன்பின் வழி நின்று சிலைபிடித்து எம்பிரான் ஏக

பின்னே அங்கு இலக்குமணன் பிரிந்ததுவும்

அயோத்தியர்கோன் உரைத்த அடையாளம்

ஈதவன் கை மோதிரமே என்றடையாளம் தெரிந்துரைக்க

மலர்க்குழலாள் சீதையும்

வில்லிறுத்தான் மோதிரம் கண்டு

அனுமன் அடையாளம் ஒக்கும் என்று

உச்சிமேல் வைத்துகக்க

திறல் விளங்கு மாருதியும்

இலங்கையர்கோன் மாக்கடிகாவையிறுத்து

காதல் மக்களும் சுற்றமும் கொன்று

கடி இலங்கை மலங்க எரித்து

அரக்கர்கோன் சினமழித்து மீண்டு

அன்பினால் அயோத்தியர்கோன்

தளிர்புரையும் அடியிணை பணிய

**யுத்தகாண்டம்**

கானஎண்கும் குரங்கும் முசுவும்

படையாக் கொடியோன் இலங்கை புகலுற்று

அலையார் கடற்கரை வீற்றிருந்து

செல்வ விபீடணர்க்கு நல்லனாய்

விரிநீர் இலங்கை அருளி,

சரண்புக்க குரை கடலை அடலம்பால் மறுக எய்து

கொல்லைவிலங்கு பணிசெய்ய

மலையால் அணைகட்டி மறுகரை ஏறி

இலங்கை பொடியாக,

சிலைமலி செஞ்சரங்கள் செல உய்த்துக்

கும்பனொடு நிகும்பனும் பட

இந்திரசித்தழியக் கும்பகர்ணன் பட

அரக்கர் ஆவி மாள, அரக்கர்

கூத்தர் போலக் குழமணி தூரமாட

இலங்கை மன்னன் முடி ஒருபதும்

தோள் இருபதும் போயுதிர,

சிலைவளைத்து சரமழை பொழிந்து

கரந்துணித்து வென்றி கொண்ட செருக்களத்துக்

கடிக்கமல நான்முகனும், கண்மூன்றத்தானும்

எண்மர் பதினொருவர் ஈரறுவர் ஓரிருவர்

மற்றுமுள்ள வானவர் மலர்மழை பொழிந்து

மணிமுடி பணிதர அடி இணை வணங்க

கோலத்திருமாமகளொடு

செல்வவீ டணன் வானரக்கோனுடன்

இலகுமணி நெடுந்தேர் ஏறி, சீரணிந்த குகனோடு கூடி

அங்கண் நெடுமதில் புடை சூழ் அயோத்தி எய்தி,

நன்னீராடிப் பொங்கிளவாடை யரையில் சாத்தித்

திருச்செய்ய முடியும் ஆரமும் குழையும்

முதலா மேதகு பல்கலனணிந்து
சூட்டு நன்மாலைகளணிந்து
பரதனும் தம்பி சத்துருக்கனனும்
இலக்குமணனும் இரவும் நண்பகலும் ஆட்செய்ய
வடிவிணை இல்லாச் சங்கு தங்கு முன்கை நங்கை
மலர்க்குழலாள் சீதையும் தானும்
கோப்புடைய சீரிய சிங்காதனத்திருந்து ஏழுலகும்
தனிக்கோல் செல்ல வாழ்வித்தருளினார்.

**ஸ்ரீராம்ஜெயம்**

********

## அயோத்தியின் மனத்துக்கு இனியான்

விக்கிபீடியாவில் அயோத்தியா பற்றி குறிப்பு இப்படி இருக்கிறது - ‘is an ancient city of India, believed to be the birthplace of Rama’ - அதாவது ஸ்ரீராம்ர் பிறந்த இடம் என்று ‘நம்பப்படுகிறது.’

அக்டோபர் 10 இரவு. பேருந்தில் தூங்கிக்கொண்டு இருந்தபோது “அயோத்தி வந்தாச்சு!” என்று எழுப்பப்பட்டேன். வெளிக்காற்று முகத்தை வருடிய நேரத்தில் எங்கிருந்தோ ராம் பஜனை கேட்டது. டியூப் லைட் வெளிச்சத்தில் சில குரங்குகள் தென்பட்டன. மறுநாள் காலை சரயூ நதியில் குளிக்கச் சென்றபோது, பெரிய சைஸ் குலோப் ஜாமுன் போல் சூரியன் என்னை வரவேற்றது. சூரியோதயத்தைப் பார்ப்பதா குளிப்பதா என்ற தடுமாற்றத்தைத் தாண்டி, சூரியோதயத்தில் சரயூவில் மூழ்கி ரசித்தேன். ‘ஸ்ரஸ்-யூ’ என்பதையே சரயூ என்று நாம் கூறுகிறோம். அதாவது பிரம்மாவின் மனமே உருகி ஒரு பெரிய நதியாக மாறியதாம்.

முக்தி தரும் க்ஷேத்திரங்கள் ஏழு. அவந்திகா - பாதங்கள், காஞ்சிபுரம் - இடுப்பு, துவாரகா - நாபி, மாயாபுரி (ஹரித்வார்) - இருதயம், மதுராபுரி - கழுத்து, காசி - மூக்கு, அயோத்தி - தலை. முக்தி தரும் க்ஷேத்திரங்களில் தலையானது அயோத்யா என்று சொல்லலாம்.

அயோத்யா என்றால் சொல்ல முடியாத அழகு என்று பொருள். ஸ்ரீ வேதாந்த தேசிகன் தனது கருட பஞ்சாசத்தில் பெரிய திருவடியின்

பார்வையை ‘அயோத்யா’ என்கிறார். அதாவது ஜெயிக்க முடியாத அழகு வாய்ந்ததாம் அவர் திருவடி.

ஆனால் இன்றைய அயோத்யா அதுவும் ‘ராம்ஜன்ம பூமி’ என்றால் உள்ளூரக் கொஞ்சம் பதற்றம் நம்மைப் பற்றிக்கொள்வதை மறுக்க முடியாது.

நாம் படிக்கும் வரலாறு வடி கட்டியது. ஏதோ ஆங்கிலேயரும், முகம்மதியர்களும் நமக்கு நல்லது செய்தார்கள் போன்ற தோற்றத்துடன் எழுதப்பட்டுள்ளது. ஹிந்துக் கோயில்களின் மீதும், நம் தேசத்தின் மீதும் அவர்கள் புரிந்த தாக்குதலின் சுவடுகளை யாத்திரை முழுவதும் பார்க்க முடிந்தது. இவை எல்லாம் நம் வரலாற்றுப் பாடத்தில் இல்லாத ஒன்று. ஆங்கிலேயர்கள்தான் ரயில்வே, போஸ்ட் பாக்ஸைக் கொண்டு வந்தார்கள் என்று ரிட்டையரான தாத்தாக்கள் பிதற்றிக்கொண்டு இருப்பதற்கு, நம் வரலாற்றைச் சரியாக எழுதாததுதான் காரணம்.

1528ல் பாபர் மசூதி ஒன்று ஸ்ரீராம்ர் கோயில் இருந்த இடத்தின் மீது மிர் பக்கி என்னும் பாபரின் படைத்தலைவரால் கட்டப்பட்டது. கலவரம் நடந்த பிறகு, ஆங்கிலேயர்கள் கட்டைப் பஞ்சாயத்து செய்து, ஒரு பகுதியில் மசூதியையும், இன்னொரு பகுதியில் கோயிலையும் அனுமதித்தார்கள். 1949ல் ஸ்ரீராம் மூர்த்திகளை அங்கே பிரதிஷ்டை செய்தார்கள். 1992ல் அங்கே இருந்த மசூதியை இடித்து மீண்டும் அங்கே ராம்ரை பிரதிஷ்டை செய்தபோது நடந்தவை எல்லாம் நீங்கள் தொலைக்காட்சியில் பார்த்த வரலாறு.

இந்தியத் தொல்பொருள் ஆராய்ச்சிக் கழகம் (ASI) 2003ல் அகழ்வாராய்ச்சியை மேற்கொண்டு, மசூதியின் அடியில் இருக்கும் கட்டட அமைப்புப் பற்றி விரிவான ஆராய்ச்சி செய்து அறிக்கை சமர்ப்பித்தது. சுமார் 3,000 ஆண்டு பழமை மிகுந்த கட்டட அமைப்புக்கு மேல் மசூதி கட்டப்பட்டதாக அறிக்கை சொன்னது. ராமர் 'மித்' இல்லை நமக்கு மித்திரன்.

"எக்கசக்க செக்யூரிட்டியாம்... மொபைல் கேமரா எதுவும் நாட் அலவ்ட்" போன்ற அறிவுரைகளால் உள்ளூர 'ராம் ஜன்ம பூமி'க்குச் சீக்கிரம் செல்லவேண்டும் என்ற பதற்றம் தொற்றிக்கொண்டது.

நம் சடகோபன் திருவாய்மொழியில் -
கற்பார் இராம-பிரானை அல்லால், மற்றும் கற்பரோ?
புல் பா முதலா, புல் எறும்பு ஆதி ஒன்று இன்றியே
நல்-பால் அயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும்
நல்-பாலுக்கு உய்த்தனன் நான்முகனார் பெற்ற நாட்டுளே?

'அயோத்தியில் வாழ்கின்ற எல்லா ஜீவராசிகளுக்கும், புல் முதல் எறும்பு வரை, ஆயோத்தியில் இருந்ததால் சுலபமாக பரமபதம் கிடைத்தது. ஸ்ரீராம்பிரானுடைய கீர்த்தியை அல்லாமல் வேறு கீர்த்திகளையும் கற்பார்களோ?'

இங்கே 'நற்பால் அயோத்தி' என்று நம்மாழ்வார் கூறுவதற்கு நம்பிள்ளை 'அயோத்தி மண்ணை மிதித்தாலே இராம் பக்தி தானாக உண்டாகும்' என்று விளக்கம் தருவாராம். அதாவது ராம்குணங்கள் நடனமாடுகிற அயோத்தி என்று பொருள்.

ஸ்ரீராம்ரை பற்றிப் பள்ளியில் எங்கு படித்தேன் என்று யோசித்தேன். Ram killed Ravana. - Active Voice; Ravana was killed by Ram. - Passive Voice. நமக்குத் தெரிந்த ராம்ர் அவ்வளவே!

ராமாயணத்தில் எவ்வளவு காண்டம் இருக்கிறது, கம்பர், துளசிதாஸ் எழுதிய ராமாயணத்தில் உத்திர காண்டம் இருக்கிறதா போன்ற தகவல்கள் பலருக்குத் தெரியாது. நம் குழந்தைகளின் நிலையை யோசித்துப் பாருங்கள்.

ஒரு மகனாக, ஒரு கணவனாக, ஓர் அரசனாக, ஒரு சகோதரனாக, ஒரு வீரனாக எப்படி வாழ வேண்டும் என்பதற்குச் சிறந்த உதாரணமாக விளங்கிய ஸ்ரீராம்ரைப் பற்றி நாம் அவர்களுக்குச் சொல்லித் தந்தால் அதுவே சிறந்த வரலாற்றுப் பாடம்.

அயோத்தி முழுவதும் மொத்தம் 12,000 இராம்ர் கோயில்கள் உள்ளன என்பார்கள். அதனால் 'பார்க்கும் மரங்களெல்லாம் நந்தலாலா' மாதிரி இங்கே போகும் இடம் இங்கே "போகும் இடம் எல்லாம் 'ராம்லல்லா" தான்.

அயோத்தியாவில் பார்க்கும் கல், கோயில், மண்டபம், மூர்த்திக்குப் பின் ஏதோ ஒரு ராம் கதை இருக்கிறது. இரண்டு நாளில் இவை எல்லாவற்றையும் சேவித்துவிட்டு வருவது என்பது பிரம்மப் பிரயத்தனம். சில முக்கியமான கோயில்களை மட்டும் அனுபவித்து சேவிப்பது என்று முடிவு செய்து புறப்பட்டோம்.

முதலில் சென்ற கோயில் கனக பவன். ஸ்ரீராம்ர், சீதையின் அந்தப்புரம். இதை கைகேயி, ராம்ர்-சீதைக்குக் கல்யாணப் பரிசாகக் கொடுத்தார். அங்கே பல மூர்த்திகள் இருந்ததால், குழப்பத்துடன், “இதில் யார் ராம்ர், சீதை?” என்றேன். “எல்லாமே ராம்ர் சீதைதான்” என்று பதில் கிடைத்தது! அங்கே ஒரு சின்ன மண்டபம் மாதிரி தென்பட, அது என்ன என்று ஒருவரிடம் விசாரிக்க, இங்கிருந்துதான் ஸ்ரீராம்ர் வனவாசம் சென்றார் என்றார்கள்.

நாங்கள் சென்ற ஆட்டோ டிரைவரிடம் “ராம் ஜென்ம பூமியை பார்த்துவிடலாம். மற்றவை எல்லாம் பிறகு” என்றோம். போகும் வழியில் ஒரு இடத்தில் ஆட்டோவின் வேகத்தைக் குறைத்து ராம்ர் கோயில் கட்டுவதற்குத் தயாராக இருக்கும் தூண், கற்கள் முதலியவற்றைக் காண்பித்தார்.

ராம் ஜன்ம பூமி வாயிலை அடைந்தபோது அங்கே camouflage உடையில் தூப்பாகியுடன் ராணுவத்தைப் பார்க்க பயமாகத்தான்

இருந்தது. கையில் இருந்த பை, பேனா, மொபைல் என்று சகல வஸ்துக்களையும் ஒரு கடையில் கொடுத்துவிட்டு உள்ளே நுழைந்தோம்.

என் பர்ஸை முழுவதும் சோசித்த முதல் காவலாளி, “ஏதாவது சிம் கார்ட் இருக்கா?” என்றார். “சின்ன சீப்பு மட்டும்தான் இருக்கு” என்றேன். அதை வாங்கிப் பக்கத்தில் இருந்த குப்பைத் தொட்டியில் போட்டார்.

இருபது அடியில் மீண்டும் சோதனை. இந்த முறை அவர் என் பர்ஸை முழுவதும் சோதித்துப் பார்த்து என் இடுப்பில் இருந்த அங்கவஸ்திரத்தைத் தடவியபின் உள்ளே அனுமதித்தார்.

இதற்கு பிறகு சர்க்கஸ் கூண்டுக்குள் போகும் சிங்கம் போலச் சென்றேன். என்னுடன் வந்தவர் கொஞ்சம் எரிச்சலாக “எதுக்கு இவ்வளவு செக்யூரிட்டி செக்” என்று சொல்லி முடிக்கும் முன் அடுத்த செக். அங்கவஸ்திரம் கழற்றப்பட்டது.

இடுப்பில் கட்டிக்கொண்டபின் மேலும் ஒரு செ.செக். மனதில் இருந்த ராம்ரைத் தவிர மற்ற எல்லாவற்றையும் சோதித்துவிட்டார்கள். போர்டிங் பாஸ் கொடுத்து வைகுண்டத்துக்கு அனுப்பினாலும் ஆச்சரியபட்டிருக்க மாட்டேன்.

கூண்டுக்குள் நடக்கும்போது வெளியே சிஆர்பிஎப் வீரர்கள் கையில் AK47 வைத்துக்கொண்டு சோர்வே இல்லாமல் காவல் காத்துக்கொண்டு இருப்பதைப் பார்க்க முடிந்தது.

சில நிமிஷத்தில் ராம் ஜன்ம பூமி என்ற பிரசித்தி பெற்ற இடம் வந்தது. தற்போது உள்ள கோயில், இரண்டு சுவற்றின் மீது தார்பாலின் கூடாரம். 'மனத்துக்கு இனியான்' என்று ஆண்டாள் போற்றிய சக்ரவர்த்தித் திருமகனான ஸ்ரீராம்ரை ஒருவித கனத்த மனத்துடன் பார்த்துக்கொண்டு இருந்தேன்.

சென்ற ஆண்டு மதுராவுக்குச் சென்றபோதும் இதே நிலைமை. எல்லாம் பெருமாள் திருவுள்ளம் என்று நினைத்துக்கொண்டேன்.
இக்ஷ்வாகு வம்சத்தில் உதித்த ஸ்ரீராம்ர், தான் ஆராதித்த ஸ்ரீரங்கநாதரை விபீஷ்ணனிடம் அன்பளிப்பாகக் கொடுத்தார் அதுவே இன்று ஸ்ரீரங்கத்தில் இருக்கும் பெருமாள். வைகுண்டத்தின் ஒரு பகுதி அயோத்தியா என்பார்கள். ராம்ர் ஆராதித்த பெருமாள், விமானம் ஸ்ரீரங்கம் வந்தபோது ஸ்ரீரங்கம் பூலோக வைகுண்டம் ஆனதில் வியப்பில்லை.

சங்க இலக்கியங்கள், வால்மீகி, ஆழ்வார்கள், கம்பன் எல்லோரும் அயோத்தி பற்றிக் குறிப்பிடுகிறார்கள். கட்டுரையின் ஆரம்பத்தில் சொல்லப்பட்டிருப்பது போல, 'நம்பப்படுகிறது' என்று சொல்லுவது அயோக்கியத்தனம். ஸ்ரீராம்ர் இங்குதான் பிறந்தார் என்று நம்

குழந்தைகளுக்குச் சொல்லித்தர வேண்டும். மாற்றக் கூடாதவற்றை மாற்றாமல் இருப்பதுதான் முன்னேற்றம்.

ஸ்ரீராம்ரை சேவித்துவிட்டு அவர்கள் கொடுத்த கற்கண்டு பிரசாதத்தை எடுத்துக்கொண்டு நடக்கும் போது மனம் முழுவதும் ஸ்ரீராம்ரே குடிகொண்டு இருந்தார். சீக்கிரம் இங்கே கோயில் கட்டப்பட்டு அதில் ஸ்ரீராம்ரைச் சேவிக்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டேன்.

அங்கே இருந்த ஒரு ஜவானிடம் பேச்சுக் கொடுத்தோம் (நல்ல வேளை என் நண்பருக்கு ஹிந்தி தெரியும்!)
சம்பாஷனை இதுதான்.
“இங்கே தான் பாப்ரி மஸ்ஜித் இருந்ததா?” என்று கேட்டோம். அதற்கு அந்த ஜவான், “நீங்களே மஸ்ஜித் என்று சொல்லலாமா? இங்கே ராம்ர் கோயில்தான் இருந்தது, மஸ்ஜித் இல்லை… இது ராம்ருக்கே சொந்தமான இடம்…”

உணர்ச்சிவசப்பட்டு “ஜெய் ஸ்ரீராம்!” என்றேன்

கொஞ்சம் தூரம் நடந்தபின் மேலும் இன்னொரு ஜவானிடம் பேச்சுக் கொடுத்தோம்.

“எவ்வளவு நாளா இங்கே காவல் புரிகிறீர்கள்?”

“இங்கே ராம்ர் கோயில் வரும் வரை நாங்கள் காவல் காப்போம்... கோர்ட் கோயில் கட்டலாம் என்றால் நான்கே மணி நேரத்தில் கோயில் கட்டி முடித்துவிடுவோம்!”

மீண்டும் “ஜெய் ஸ்ரீராம்” என்றோம். ஜவான்கள் சல்யூட் அடிக்க, உணர்ச்சிவசப்பட்டுத் திரும்பினேன்.

அயோத்தியா பற்றிய செய்திகள், படங்கள், புத்தகங்களை கூகிளில் பார்க்கலாம். ஆனால் நேரில் பார்க்கும்போது இங்கே ஸ்ரீராம் ஸ்பரிசம் ஏற்படுவது நிச்சயம். எங்கு திரும்பினாலும் ஸ்ரீராம் பஜனைகள். கோயில்களில் தாடி வைத்த பெரியவர்கள் ஸ்ரீராமாயணத்தை சதா படித்துக்கொண்டே இருக்கிறார்கள். எங்கு திரும்பினாலும் வானரக்கூட்டம். வீடுகள் இருக்கிறதா, இல்லை எல்லாம் கோயிலா என்று பிரமிப்பே ஏற்படுகிறது.

ஸ்ரீராம்ரை சேவித்துவிட்டு ‘அம்மாஜி மந்திர்’ என்று பிரசித்தி பெற்ற கோயிலுக்குப் பயணம் ஆனேன். இந்த கோயில் சுமார் 700 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. கோயிலைப் பார்த்தவுடன் நம் மனதில் ‘ரகுவம்ச சுதா’வின் கதன குதூகலம் ஏற்படுகிறது. காரணம் கோயில் தென்னாட்டுப் பாணியில் அமைந்துள்ளது. கோயிலின் உள்ளே சீதை ராம்ர், லட்சுமணருடன் காட்சி தருகிறார்கள். கூடவே ஹனுமார். தனி சன்னதியில் சின்னதாக ஆனால் மிக அழகாக ஸ்ரீரங்கநாதர் சேவை. எதிரே ஆழ்வார்களுடன் ஸ்ரீராமானுஜர் எழுந்தருளியிருக்கிறார்.

கோயிலுக்கு வெளியே வரும் போது தம்பதிகள் படம் ஒன்று கண்ணில் தென்பட அது யார் என்று விசாரித்தேன். யோகி பார்த்தசாரதி, அவர் தர்மபத்தினி யோகினி சிங்கம்மாள்.

இவர்களுக்கும் இந்த கோயிலுக்கும் என்ன சம்பந்தம்? இவர்கள் கனவில் ஸ்ரீராம்ர் தோன்றி திருப்புள்ளாணியில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அர்ச்சா மூர்த்தியாக இருக்கிறேன், அதை அயோத்தியில் பிரதிஷ்டை செய்ய வேண்டும் என்று பணிக்க, ராமேஸ்ரத்துக்குப் பயணித்தார்கள். குறிப்பிட்ட இடத்தில் ஸ்ரீராம்ர், சீதை, லட்சுமணன் ஆகிய மூவரின் அர்ச்சா மூர்த்தி கிடைக்க, அதை பிரதிஷ்டை செய்ய அயோத்தியில் நிலத்தை வாங்கிக் கோயிலை ஏற்படுத்தினார்கள்.

1900ல் யோகி பாரத்தசாரதி ஆசாரியன் திருவடியை அடைந்த பிறகு நாற்பது வருட காலம் அவர் தர்மபத்தினி சிங்கம்மாள் கைங்கரியங்களைப் பார்த்துக்கொண்டாள். அதனால் இந்தக் கோயில் ‘அம்மாஜி’ மந்திர் என்று அழைக்கப்படுகிறது.
கோயிலில் தமிழில் நாலாயிரத் திவ்ய பிரபந்தங்கள் பேனர் கண்ணில் பட்டது. அயோத்தியா பற்றி ஆழ்வார்களின் மங்களாசாசன பாசுரங்கள். சேவித்தேன்.

தென் திசையிலிருந்து வட திசைக்கு பிரபந்தம் வந்துள்ளது. அதற்கு காரணம் ஸ்ரீராம்ர்தான். ஸ்ரீராம்ர் அருள் இல்லை என்றால் நமக்கு நம்மாழ்வாரே கிடைத்திருக்க மாட்டார்.

மதுரகவிகள் அயோத்தியில் இருந்தபோதுதான் வானத்தில் ஒரு ஒளி தென்பட்டது. அதைத் தேடிக்கொண்டு சென்று திருக்குறுகூர் என்ற அழ்வார் திருநகரிக்கு வந்தடைந்து நம்மாழ்வாரைப் புளியமரத்துப் பொந்தில் பார்த்து அவருக்கு சிஷ்யரானார். திருவாய்மொழி நமக்குக் கிடைத்தது. இது அயோத்தியின் பெருமை!

அடுத்து வசிஷ்ட் குண்ட் என்ற அழகான கோயில். ராம்ர் மற்றும் அவருடைய சகோதரரர்கள் பயின்ற இடம். குருவிடம் நால்வரும் படிக்கும் சிற்பம் அழகாகவும் மனதுக்கு நிறைவாகவும் இருக்கிறது. அங்கே ஒரு கிணறு இருந்தது. “வாங்க அதை காண்பிக்கிறேன்” என்று ஒருவர் எங்களை கீழ்ப்பகுதிக்கு அழைத்துச் சென்றார். கிணறு சின்ன குளம் போலக் காட்சி அளித்தது! “சரயூ நதியில் என்ன அளவு தண்ணீர் இருக்குமோ அதே அளவு இங்கே இருக்கும் ” என்று எங்களை ஆச்சரியப்படுத்தினார். அதில் சின்னதாக ஒரு ஆமை நீச்சல் அடித்துக்கொண்டு இருந்தது

பிரியாவிடை கொடுத்துவிட்டு ஹனுமான் கடீ என்ற இடத்துக்குச் சென்றேன். சிறு குன்றின் மீது அமர்ந்திருக்கும் ஹனுமானுக்கு நாமே லட்டுவைச் சமர்பித்துவிட்டு வரலாம். இந்த ஹனுமான்தான்

அயோத்தியை இன்றும் காத்துக்கொண்டு இருக்கிறார். அதனால் ரொம்ப பவர் ஃபுல் அனுமார்.

அயோத்தி முழுக்க குரங்குகளைப் பார்க்க முடிகிறது. அவைகளை யாரும் ஒரு சங்கடமாக நினைப்பதில்லை. குப்தார் காட் என்ற சரயூ நதிக்கரையில் (அயோத்தியிலிருந்து 15 கிமீ தூரம்) ஸ்ரீராம்ன் வைகுண்டத்துக்கு எல்லோரையும் அழைத்துச் சென்ற இடம். எல்லோரும் என்றால் நாட்டு மக்கள், புல், கல் என்று எல்லாவற்றையும், ஒருவரைத் தவிர. அது ஹனுமான். ராம் நாமம் சொல்லிக்கொண்டு இங்கேயே அயோத்தியில் இருக்கிறேன் என்று சொல்லிவிட்டார். அதனால்தான் அயோத்தியா இன்றும் இருக்கிறது.

பிருந்தாவனம் போல அயோத்தியில் குரங்குகள் சேட்டை செய்வதில்லை. கண்ணன் கோபிகைகளின் துணியை ஒளித்துவைப்பது போல பிருந்தாவனத்தில் குரங்குகள் நம் மூக்குக் கண்ணாடியைப் பிடுங்கி வைத்துக்கொள்ளும் விளையாட்டு கிடையாது.

பாபர் மசூதிக்குள் இந்து பக்தர்களின் வழிபாட்டுக்குத் திறந்து விடும் உத்திரவை 1986ல் பிறப்பித்த பைசலாபாத் மாவட்ட நீதிபதி கே.எம்.பாண்டே, பதவியிலிருந்து ஓய்வு பெற்றபின், 1991ல் தனது சுய சரிதையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

“பூட்டியிருந்த கோயிலின் கதவை பக்தர்களின் தரிசனத்துக்குத் திறந்து விடுவதற்கான உத்திரவைப் பிறப்பித்த அந்த நாளன்று, எனது நீதிமன்ற அறையின் மேற்கூரையில் கொடிமரத்தைப் பற்றியபடி ஒரு கருப்புக் குரங்கு அமர்ந்திருந்தது. அன்றைய தினம் தீர்ப்பு என்ன என்பதைத் தெரிந்து கொள்வதற்காக நீதிமன்ற வளாகத்தில் கூடியிருந்த பைசலாபாத், அயோத்தி நகரங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் அந்தக் குரங்குக்கு வேர்க்கடலை, பழம் முதலானவற்றைக் கொடுத்தனர். அந்தக் குரங்கோ அவற்றைத் தொடக்கூட இல்லை. மாலை 4.40க்கு நான் தீர்ப்பைப் படித்தவுடன் அந்தக் குரங்கு அங்கிருந்து அகன்றது. பின்னர் எனது பாதுகாப்புக்காக வந்திருந்த மாவட்ட ஆட்சியரும், போலிஸ் கண்காணிப்பாளரும் என்னை எனது பங்களாவுக்கு அழைத்துச் சென்றனர். பார்த்தால், எனது பங்களாவின் தாழ்வாரத்தில் அமர்ந்திருக்கிறது அந்தக் குரங்கு. எனக்கு அச்சரியம் தாங்கமுடியவில்லை. நிச்சயமாக ஒரு தெய்வீக சக்திதான் அந்தக் குரங்கு என்பதை உணர்ந்துகொண்டு அதனை வணங்கினேன்.”

மதிய உணவு சமயம் சாப்பாட்டைத் தவிர்த்து மீண்டும் ராம் ஜன்ம பூமிக்குப் பயணித்தேன். இந்த முறையும் என்னை முழுவதும் சோதித்து அனுப்பினார்கள். என் சீப்பை போட்ட அந்த குப்பைத் தொட்டியில் எட்டி பார்த்தேன். நீங்கள் நம்ப மாட்டீர்கள், உள்ளே பல சீப்புக்கள்!

மீண்டும் மனத்துக்கு இனியானை சற்று நேரம் சேவித்துவிட்டு அடுத்தமுறை வரும்போது கோயில் கட்டியிருக்க வேண்டும் என்று ஸ்ரீராம்ரிடம் ஆத்மார்த்தமாகப் பிராத்தனை செய்துகொண்டேன்.

மாலை நாட்டிய நிகழ்ச்சி. கூடவே ஸ்ரீராம்ர் பட்டாபிஷேகம் நடந்தது. அந்த நிகழ்வின்போது உ.வே ஸ்ரீவேளுக்குடி ஸ்வாமி குழுமியிருந்த 1,500 பேரிடமும் ஒரு பிரார்த்தனை வைத்தார். அது, “விரைவில் பல ஆயிரம் பேர் ஒரே இடத்திலிருந்து பஜனை செய்யும் வசதியுடன் ஸ்ரீராம்ருக்குக் கோயில் ஒன்று அமைய வேண்டும்” என்பதுதான். நிச்சயம் இந்தப் பிரார்த்தனை பலிக்கும்.

மறுநாள் குப்தார் காட் நதிக்கரையில் நீராடிவிட்டு, அயோத்தியின் பெருமையை முழுவதும் சொல்ல முடியாமல் ‘யாது என் வியப்பாம்’ என்று கம்பன் சொல்லியது நிஜம் என்று நினைத்துக்கொண்டு கிளம்பினேன்.

- சுஜாதா தேசிகன்

வலம் நவம்பர் 2017 இதழில் பிரசுரம் ஆனது.

**********

# திருநைமிசாரண்யம்

யாதொருவராலும் நிர்மாணிக்கப்படாமல், தாமாகவே உண்டானதாக விளங்கும் திருத்தலங்கள் "ஸ்வயம்வ்யக்த க்ஷேத்திரங்கள்" என்று வணங்கப்படுகின்றன. இவ்வாறாக இப் பூவுலகில் அமைந்துள்ள எட்டு ஸ்வயம்வ்யக்த க்ஷேத்திரங்களில் முதன்மையானது ஸ்ரீரங்கம். மற்றவை - ஸ்ரீமுஷ்ணம், திருப்பதி எனும் திருவேங்கடம், முக்திநாத், திருநைமிசாரண்யம், தோதாத்திரி எனும் வானமாமலை, புஷ்கரம் மற்றும் பத்ரிநாத்.

நைமிசாரண்யம்

#அருள்மிகு_தேவராஜன்_திருக்கோவில் #திருநைமிசாரண்யம் மூலவர்: தேவராஜன் (ஸ்ரீஹரி) தாயார்: ஸ்ரீஹரிலக்ஷ்மி, புண்டரீகவல்லி கோலம்: நின்ற திருக்கோலம் திசை: கிழக்கு விமானம்: ஸ்ரீ ஹரி விமானம் தீர்த்தம்: சக்ர தீர்த்தம், கோமுகி தீர்த்தம், நேமி தீர்த்தம், திவ்ய தீர்த்தம், விச்ராந்த தீர்த்தம் மங்களாசாசனம்: திருமங்கையாழ்வார் ஊர்: நைமிசாரண்யம் அற்புதங்கள் :- ஆதிநாதனான இறைவன் திருமாலின் திருஅவதாரமாகவும், ஐந்தாவது வேதமாகிய மகாபாரதம்இயற்றப்பட்ட புண்ணியத் திருத்தலம். புராண காலத்தில் இத்தலம் இருந்த பகுதி முழுவதும் காடுகளால் சூழப்பட்டு இருந்ததாகவும், அவ்வனத்திற்கு நைமிசாரண்ய வனம் என்று பெயர் பெற்று விளங்கியதாகவும் கூறப்படுகிறது. வியாச முனிவர் தொகுத்துக் கூற முழு முதற் கடவுளான விநாயகப்

பெருமான் மகாபாரதம் இயற்றிய அற்புதம் நைமிசாரண்ய வனத்தில் நிகழ்ந்ததாகக் கூறப்படுகிறது. மகாபாரதமே ஐந்தாவது வேதம். அந்த ஐந்தாவது வேதமாகிய மகாபாரதமே இயற்றப்பட்ட அற்புதமான தலத்தை அறிந்திடும் போது பிரமிப்பு தான் தோன்றுகிறது. ஏனென்றால் வியாச முனிவர் சொல்ல விநாயகப் பெருமான் எழுதிய மகாபாரதம் இயற்றிய அற்புதமான வனம் நைமிசாரண்யம். அப்பேற்பட்ட நைமிசாரண்ய வனத்தில் இருந்து அருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணரான தேவராஜனை நாம் தரிசித்துக் கொண்டு இருக்கிறோம் அல்லவா!!!. #தலவரலாறு:- முற்காலத்தில் பாரத பூமியில் வசித்து வந்த முனிவர்கள் அனைவரும் உலக நன்மையைக் கருதி பன்னிரண்டு ஆண்டுகள் சந்திர வேள்வியைச் செய்ய முடிவு செய்தனர். அதற்கான இடத்தைத் தெரிவு செய்ய பிரம்மாவின் துணையை நாடினர். அதற்கு பிரம்மா ஒரு தர்ப்பைப் புல்லை எடுத்து அதை ஒரு சக்கரம் போன்று வளைத்து அதனை வானுலகில் இருந்து பூமியில் விட்டார். அந்த சக்கரம் நைமிச வனம் என்னும் பகுதியில் விழுந்தது. வனம் என்பதற்கு வடமொழியில் ஆரண்யம் என்பது பொருள். இதன் காரணமாகவே இவ்விடம் நைமிசாரண்யம் எனப் பெயர் பெற்றது. முனிவர்கள் எண்ணியவாறே வேள்வியை நிகழ்த்த, அவர்களுக்காக இறைவன் தேவாதிராஜன் என்ற திருநாமத்தில் காட்சி தந்து அருளினார். உலகம் உய்ய(நன்மை) வேள்வி நிகழ்ந்த இடமாதலால், இத்தலம் வந்து தரிசிப்பவர்களுக்கு முக்தி நிலை கிட்டும் என்று எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனான தேவாதிராஜன் வரமளித்தார். முக்தி

கிடைக்கும் தலம் என்றால் எப்பேர்ப்பட்டவர்களுக்கு முக்தி கிடைத்தது? ஏராளமான முனிவர்களும், தவ சீலர்கள் முக்தி கண்ட தலம். ஒரு சில முனிவர்கள், தவ சீலர்கள் முக்தி காணும் போதே சிறப்பான தலம் என்கிறோம். ஏராளமான முனிவர்கள் என்றால் இத்தலத்தின் சிறப்பைப் பற்றி என்ன சொல்வதென்று எனக்கே தெரியவில்லை. #இறைவனின்_திருமேனி:- திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்த இத்தலத்தின் ஆலயம், விமானம் ஆகியவை இருந்த இடம் தெரியவில்லை. சில நூற்றாண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட ஆலயத்தையே தற்சமயம் நம்மால் தரிசனம் செய்ய முடிகிறது. ஆரண்ய ரூபமாக இறைவன் இத்தலத்தில் காட்சி தந்ததாக புராணங்களில் கூறப்படுகிறது.

இயற்கை வழிபாடு முறைப்படி எம்பெருமானை வன உருவத்தில் வழிபடும் முறை 108 திவ்யதேசங்களில் இங்கு மட்டுமே காணப்படுவது சிறப்பம்சம். இறைவனுக்கு சக்ர நாராயணன் என்ற பெயரும் உண்டு. இந்த சக்கர நதிக்கரையில் சக்கரத்தாழ்வார், ராம்ர், லட்சுமணன், சீதை முதலியோர்க்கும் கோவில்கள் உண்டு. சிறப்பாக இங்கு விநாயகருக்கும் தனிச்சன்னதி உண்டு. இங்கிருந்து கோமுகி (கோமடி) நதிக்குப் போகும் வழியில் விநாஸ கட்டி என்ற இடத்தில் வேதவியாசருக்கும் ஆலயம் உள்ளது. வியாச முனிவரும், சுக முனிவரும் இங்கிருந்து கொண்டு தான் பாகவதம், பாகவதப் புராணங்கள் போன்றவற்றை இயற்றினார்கள். இதே ஊரில் மற்றொரு புறத்தில் அனுமன் கட்டி என்றழைக்கப்படும் ஆலயத்தில் இராம், லட்சுமணர்களைத் தமது தோளில் தாங்கி

எழுந்தருளியுள்ள அனுமன் சிலை ஒன்றும் உள்ளது. சூதபௌராணிகர் உக்கிரசிரவஸ், குலபதி சௌனகர் தலைமையிலான முனிவர்களுக்கு மகாபாரதம் மற்றும் புராணங்களை எடுத்துக் கூறினார். #சிறப்புகள்:- கோமுகி ஆற்றங்கரையில் அமைந்துள்ள அற்புதத் திவ்யதேசம். திருமகள் பிராட்டி ஸ்ரீஹரிலக்ஷ்மி என்ற திருநாமத்தில் காட்சி தரும் திவ்யதேசம். ஏராளமான முனிவர்களும், தவசீலர்களும் முக்தி கண்ட ஆனந்தமயமான திவ்யதேசம். திருமங்கையாழ்வார் 10 பாசுரங்கள் பாடியருளிய திவ்யதேசம். மங்களாசாசனம்:- திருமங்கையாழ்வார் இத்தல இறைவனை 10 பாசுரங்களால் மங்களாசாசனம் செய்துள்ளார்.

********

## நைமிசாரண்யம் - புனித யாத்திரையில் அனுபவம்

நைமிசாரண்யம் உத்தராஞ்சல் மாநிலம் சீத்தாபூர் மாவட்டத்தில் லக்னோவில் இருந்து 89 கி மீ தொலைவில் கோமதி ஆற்றக் கரையில் அமைந்துள்ள அழகிய ஸ்தலம். லக்னோவில் இருந்தே நேரடி பஸ்வசதி இருக்கிறது. இதை நைமிசார் நிம்கார் என்றும் அழைக்கிறார்கள்.

ஒரு முறை முனிவர்கள் பிரம்மாவை அணுகி அமைதியாக பன்னிரெண்டு ஆண்டுகள் தவமிருந்து மாபெரும் வேள்வி செய்ய ஏற்றதொரு இடத்தைத் தங்களுக்கு காண்பித்தருள வேண்டும் என வேண்டினர். அப்போது பிரம்மா ஒரு தர்ப்பைப் புல்லை எடுத்து சக்கர வடிவில் வளைத்து அதனை உருட்டி விட்டு “இந்தச்சக்கரம் எங்கு போய்நிற்கிறதோ அதுவே நீங்கள் விரும்பிய இடம்” என்றாராம்.அந்தச் சக்கரம் நின்ற இடம் தான் இந்த நைமிசாரண்யம். நேமி என்றால் சக்கரம் ஆரண்யம் என்றால் காடு என்பர். நைமிசாரண்யத்தில் வேள்வியை நிறைவு செய்த முனிவர்கள் வேள்வியின் பலனை மகவிஷ்ணுவுக்கு தர எண்ணினார்கள். அதன்படியே வேள்விக் குண்டத்தில் எழுந்தருளிய விஷ்ணுவும் அவிர்பாகம் பெற்றார் என்கிறது ஸ்தலபுராணம். திரேதாயுகத்தில் அஹி ராவணன் மஹிராவணன் இன்ற அசுரர்கள் ராம் லட்சுமணர்களைப் பாதாள லோகத்துக்கு கொண்டு சென்றுவிட்டனராம். அனுமன் அசுரர்களைக் கொன்று ராம் லட்சுமணர்களைத் தோளில்சுமந்து வந்தாராம். அப்போது

அவர் வந்த இடமான நைமிசாரண்யம் என்று உள்ளூர் மக்கள் சொல்கிறார்கள். இந்தத் திருதலத்தில் ஸ்ரீமகாவிஷ்ணு ஆரண்ய ஸ்வரூபியாக இருப்பதாக ஐதீகம். அதாவது வனம் வடிவில் அருள்கிறார். இறைவனை இயற்கையோடு இயைந்த வனவடிவில் வணங்கும் முறை 108 வைணவ திவ்ய தேசங்களில் இங்கு மட்டும்தான். அதுபோல ஸ்ரீ விநாயகருக்கு தனிச் சந்நிதி இருப்பதும் இங்கு சிறப்பு

நாங்கள் 12 பேர் இந்த நைமிசாரண்யம் என்னும் மஹாபுண்ணிய க்ஷேத்திரத்தைத் தரிசிக்கும் வாய்ப்புக் கிடைக்கப்பெற்றோம். சென்ற பிப்ரவரி 2016 இல் புதுடில்லி இலிருந்து கிளம்பினோம். ரயில் மார்க்கமாக லக்னோ சென்று இரவு அங்கு தங்கி காலை 7 மணிக்கு வான் மூலம் நைமிசாரண்யம் அடைந்தோம். அங்கு எங்களுக்கு தங்க கணபதி தாம் என்ற இடம் முன்பே பதிவு செய்து இருந்தோம். அங்கு எங்கள் உடைமைகளை வைத்துவிட்டு முதலில் சக்ர தீர்த்தம் என்றோம். தீர்த்த ப்ரோஷணம் செய்து கொண்டு அங்குள்ள மற்ற தெய்வங்களை தரிசித்தோம். அங்கு நாங்கள் போனபோது ஒரு பிரேத ஊர்வலம் வந்து அதற்கு அந்த சக்ர தீர்த்தத்தை தெளித்துகொண்டு பின்பு தூக்கி செல்வதை பார்த்தோம். அது நல்ல சகுனமல்லவா! பின்பு அருகிலேயே உள்ள அஹோபில மடம் பாலாஜி யை தரிசித்து அங்கு மடத்திலேயே தமிழ் நாட்டு மதிய உணவு உண்டோம். மதியம் ஸ்ரீ லலிதா தேவி மந்திர் என்ற ஒரு சக்தி பீடம் அருகில் உள்ளது. அங்கு சென்று தரிசித்தோம். அம்பாளின் இதயம் விழுந்த சக்தி பீடம் இது. மாலை

வியாச கட்டி என்ற வியாசர் தங்கி புராணம் எழுதிய இடம் சென்றோம். அது சுமார் ஆறு கிலோமீட்டர் துரம் உள்ளது. வேனில் சென்றோம். வியாச ரின் உருவம் இங்கு உள்ளது, ஒரு பெரிய ஆலமரம் 5095 ஆண்டுகள் பழமையானது. 88ஆயிரம் முனிவர்கள் இங்கு தவம் செய்தார்கள் என்று சொல்கிறார்கள். அங்கு அந்த இடத்தில உள்ள அர்ச்சகர் பண்டா முனிவர் வியாசர் பற்றியும், அந்த இடத்தின் மகிமை பற்றியும் ஹிந்தியில் சொன்னார். அதை சுந்தரம் தமிழில் எங்களுக்கு விளக்கினார்.

அந்த இடத்திலேயே ராதா கிருஷ்ணன் கோயில் ஒன்று விசாலமான இடத்துடன் இருந்தது. அங்கு எங்கள் குருஜி அமர்ந்து ஸத்சங்கம் நடதினோம். குருஜி அவர்கள் சுமார் ஒன்றரை மணி நேரம் குருமண்டலம் தோன்றியது, தவம், தியானம் என்று மிக உபயோகமான விஷயங்கள் பற்றி சொன்னார்கள். நாங்களும் எங்களில் சிலர் எங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொண்டோம். இரவு ஆகிவிட்டதால் தங்குமிடம் வந்து இரவு உணவு உண்டபின் ஒய்வு கொண்டோம்.

மறுநாள் காலை சக்ர தீர்த்தத்தில் ஸ்நானம் முன்பே சொன்னபடி அந்த தீர்த்தம் உள்ளே சுழன்று கொண்டு இருக்கிறது. ஸ்நானம் செய்யும்போது எங்களை அடியில் சுற்றி இழுத்துக்கொண்டு செல்வதை உணர்ந்தோம். சிலர் மூன்று முறை கூட சுற்றினோம். அப்படியே அனைவரும் சித்து தூரத்தில் உள்ள கோமதி நதி சென்றோம். அங்கு ஓடும் ஜலம் மிக அழகு. ஸ்நானம் அற்புதம்.

மதியம் பார்க்கவேண்டிய பல இடங்களில் ஒன்று 'ருத்ராவர்த்'

என்னும் இடம். இதுவும் கோமதி நதிக்கரை. இது ஊருக்கு வெளியே பன்னிரண்டு கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. ஒரு கெய்டு எங்களை அழைத்து சென்றார். சிவபெருமான் அருள் நிறைந்துள்ள இந்த இடம், மிக எளிமையாக, அமைதியாக இருக்கிறது. இந்த இடத்தைச் சென்றடைந்தோம். அதன் அருகில் இருந்த ஒரு கடையில், ஒரு தட்டில், வில்வம், பூ,வாழைப்பழம், ஆரஞ்சு பழம் ஊதுபத்தி முதலானவை விற்கிறார்கள். அவைகளை வாங்கிக் கொண்டோம்.

அங்கே, ஒரு சிறு கோவிலில், சிவபெருமான் சன்னதி இருக்கிறது. தரையில் இருக்கும் ஆவுடையார், அதன் மேல் சிறு லிங்க வடிவம் அமைந்த சன்னதி அது. அங்கே ஒரு சாது இருந்தார். எங்களைக் கண்டதும், அருகே இருந்த ஒரு சிறு குளத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு கோமதியின் தண்ணீர் சற்றுக் கலங்கலாக உள்ள ஒரு சிறு குளம் அது. படிகளில் இறங்கிச் சென்றோம். எங்கள் கைகளில் இருந்ததட்டுக்களிலிருந்த வில்வ தளங்களை மொத்தமாக வாங்கி, எங்களிடம் காண்பித்து, சிவனை வேண்டி குளத்தில் போட்டோம். என்ன ஆச்சரியம்!!!, வில்வ இலைகள், குளத்தின் மேலே மிதக்காது, உள்ளே சென்று விட்டன. அடுத்த ஆச்சரியம் சில கணங்களில் நிகழ்ந்தது. எங்கள் கைகளில் இருந்த வாழைப்பழங்களை வாங்கி, ஒவ்வொருவராகக் குளத்தின் உள்ளே போடச் சொன்னார். நாங்களும் செய்தோம். முழு வாழைப்பழம், குளத்தின் உள்ளே போட்டதும், சற்று மூழ்கி, உடனே சட்டென்று, திரும்பி மேலே எழும்பி செங்குத்தாக மிதந்து

வந்தது. துளிஅழுக்கு இல்லாமல், பளிங்கு போல்!!!. ஆச்சரியத்தில் எங்களுக்கு வாய் மூடவில்லை. சிவப்பிரசாதம் என்று பக்தியுடன் அந்த சாது அவற்றை எடுத்து வழங்கினார். நாங்களும் சாப்பிட்டோம். பிறகே சிவன் சன்னதிக்கு அழைத்துச் சென்றார். ஒரு செம்பில் குளத்து நீரை எடுத்து வந்து அபிஷேகம் செய்து, கையோடு கொண்டு வந்திருந்த வில்வதளங்கள் மற்றும் பூக்களால் அர்ச்சித்து, ஊதுபத்தி காண்பித்து வழிபட்டோம் (அங்கு நாமே செய்யலாம்). அருகில், நாகர், பகளாமுகிதேவி ஆகியோரின் சன்னதிகளும் தனிக்கோவிலாக அமைந்துள்ளன. அவற்றையும் தரிசித்தோம். பக்கலில் ஒரு பிணம் எரிந்து கொண்டு இருந்தது. பிறகு அந்த சாது கூறினார். சிவனருள் இருப்பவர்களுக்கு மட்டுமே, பழம் இவ்வாறு மேலேழும்பி வருமாம். நாங்கள் இறையருளை எண்ணி மெய்சிலிர்த்தோம். தட்டுக்களை திரும்பக் கொண்டு கொடுக்கும் போது, கடைக்காரரும், 'பழம் மிதந்ததா?' என்று கேட்டார். சிலருக்கு அவ்வாறு மிதக்காதாம். 'இறையருள் இருந்தால்தான் இந்த இடம் வரவே முடியும். இதைப் பற்றித் தெரிந்தவர்கள் மிகக் குறைவு. அப்படியும் சிலருக்கு பழம் உள்ளே போய்விடும்' என்றார். சிவனருளை எண்ணி, மகிழ்தோம். வணங்கியபடி ஊர் திரும்பினோம். நைமிசாரண்யம் செல்லும் வாய்ப்பு கிடைக்கப் பெறுபவர்கள், தவறாது இந்த இடத்தைத் தரிசிக்க வேண்டும். அங்குள்ள சிவன் கோயில் பற்றிய விவரம் அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். சிவபெருமானின் அருட்பிரசாதம் தங்களுக்குக் கிடைத்தது பூர்வபுண்ணியமேயாகும். சிவனருள் நம் அனைவருக்கும் சித்திப்பதாகுக.

மாலை எங்கள் குருநாதர் நடத்திய சத்சங்கத்தில் ந்யாசம், ரஸ்மிமாலை மற்றும் உபாசனை பற்றி நிறைய தெரிந்து கொண்டோம்.

By V.Savithri, Chennai

**********